# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 300/2025** |
| Prosecution witness | : | P.W. 4 (Additional Witness) |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | மகாலிங்கம் |
| Village | : | குடவாசல் காவல் நிலையம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 52 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 25th day of June 2026. A1,A3 died. A2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சுப்பரமணியன் மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான காவல் ஆய்வாளர்கள் திரு. ரமேஷ், திரு. மணிவேல் மற்றம் திரு. ராஜகோபால் ஆகியோர்கள் தற்போது வேறு மாவட்ட காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும் மேற்படி நபர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி நான் இவ்வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 09.06.2020 ம் தேதி மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சுப்ரமணியன் என்பவர் குடவாசல் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது சிமிழி கிராமநிர்வாக அலுவலரான ஜெயராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண். 1241/2020 இதச சட்டபிரிவுகள் 187, 189, 342, 353 மற்றும் 21(1) M&M (D&R) Act ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும் அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)** பின்னர் இவ்வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவர் வசம் ஒப்படைத்துள்ளார்.

மேற்படி காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.30 மணியளவில் சம்பவ இடமான சிமிழி கிராம நிர்வாக அலுவலகம் முன்பாக சென்று சாட்சிகள் முருகேஷ் மற்றும் விஷ்வநாதன் ஆகியோர்கள்

முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)** மேலும் இவ்வழக்கில் சிமிழிகிராமத்தில் அமைந்துள்ள புலஎண்கள் 186, 187/6 அரசு புறம்போக்கு தோப்பில் மணல் ஏற்றுவதற்கு அரசு அனுமதியின்றி மணல் அல்லுவதற்கு பயன்படுத்திய Hitachi வாகனத்தை மேற்படி புல எண்களிலிருந்து சாட்சிகள் கிராம பணியளார் திரு. சீனிவாசன் மற்றும் கலியமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைபற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். அதிலும் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** மேற்படி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளான Hitachi வாகனத்தை படிவம் 91 மூலம் சமூக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. **(படிவம் 91 ஆ.சா.ஆ.8 ஆகவும் Hitachi வாகனம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அது நீதிமன்ற வழக்கு சொத்து எண் 74/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் சிமிழி ஈமகிரியை மண்டபம் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் சங்கர், வெங்கடேஷ் ஆகியோர்களை அன்றைய தினமே 17.45 மணியளவில் குற்றகாரணம கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்குகோப்பினை நிலையபொறுப்பிலேயே வைத்துவிட்டார்.

பின்னர் காவல் ஆய்வாளர் மணிவேல் என்பவர் இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துகொண்டு மேற்படி பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவரிடம் கூறிய அதே சங்கதிகளை அவரிடம் கூறியதால் அவர் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை.

பின்னர் இவ்வழக்கில் மற்றொரு எதிரியான வரதராஜன் என்பவரை கடந்த 06.08.2020 ம் தேதி 05.00 மணியளவில் சிமிழி ரோட்டுத்தெரு எதிரியின் வீட்டு முன்பாக குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் காவல் ஆய்வாளர் மணிவேல் என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்குகோப்பினை நிலையபொறுப்பிலேயே வைத்துவிட்டார்.

பின்னர் காவல் ஆய்வாளர் ராஜகோபால் என்பவர் இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துகொண்டு மேற்படி பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவரிடம் கூறிய அதே சங்கதிகளை அவரிடம் கூறியதால் அவர் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை. மேலும் சாட்சிகளை விசாரணை செய்த வகையில் எந்த விதமான கனிமவள திருட்டில் எதிரிகள் ஈடுபடவில்லை என்று அவரது

விசாரணையில தெரியவந்துள்ளதால் இவ்வழக்கின் இதச சட்டபிரிவுகள் 187, 189, 342, 353 மற்றும் 21(1) M&M (D&R) Act லிருந்து இதச சட்டபிரிவுகள் 187, 342, 353 ஆக சட்டபிரிவு மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்டுகிறது)**

இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டபிரிவுகள் 187, 342, 353 ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 03.07.2025 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :-

இவ்வழக்கினை காவல் ஆய்வாளர்கள் ரமேஷ், மணிவேல் ஆகியோர்கள் புலன்விசாரணை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் மேற்படி காவல்ஆய்வாளர்களின் பெயர்கள் குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்துள்ள சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் சம்பவ இடத்தை நேரில் பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் தடயபொருட்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து அதற்கேற்ப ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.25 22:06:31 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.